## பத்தேகம பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 04 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

----------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பத்தேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதிய பங்களிப்புத் தொகை மீதி ரூபா 6,195,139 தொகை எனினும், நிதி கூற்றுக்களில் அவை ரூபா 3,857,925 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர் ரூபா 2,337,214 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 15,927,113 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே

மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 15,927,113 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மான வேலைகள் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 17,492,861 தொகை எனினும், நிதி கூற்றுக்களில் அவை ரூபா 7,230,293 தொகை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் மூலதனச் செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 10,262,568 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதி ரூபா 4,744,664 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,600,379 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன் மீதி ரூபா 144,285 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சம்பள மீளளிப்பு தொகை என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 18,087,501 தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் பகிர்வு செய்யாமல் ஒரே நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) எதிர்வரும் வருடம் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 94,716 இற்கான வீதவரி மற்றும் ரூபா 2,505 இற்கான ஏக்கர் வரி என்பன முற்பெறுவனவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமல், நிலுவை வரி மீதியில் இருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 122,487 இற்கான மூலதன செலவுகள் நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவுகள் என காட்டப்பட்டிருந்தன.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதி இடையே ரூபா 322,763 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களின் மீதி ரூபா 14,721,292 தொகை எனினும் அதனோடு தொடர்புடைய துணைப்பதிவேடுகள் சமப்படுத்தியிருக்காமையால் கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதிகள் துனைப்பதிவேடுகளின் மீதிகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

1.3.4 தொங்கல் கணக்குகள்

---------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,581,230 இற்கான தொங்கல் கணக்குகளின் வரவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 80,414,599 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், வரைபுகள், நாளதுவரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், பட்டோலைகள், கணிப்பீட்டு சபை அறிக்கைகள், முறையாக பேணப்படும் கடன் கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் பதிவேடுகள், காலப் பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்ஞிய மீண்டுவரும் செலவு ரூபா 3,278,506 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 2,192,716 ஆகும்

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 நிலுவை வருமானம்

-----------------------------

மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,533,084 இற்கான வீதவரி, ரூபா 21,233 இற்கான ஏக்கர்வரி மற்றும் ரூபா 509,370 இற்கான வாடகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 296,917 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 8,207,381 இற்கான முத்திரை கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தலைவர் மற்றும் 14 மந்திரிமார்களினால் 2013 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று கணக்காய்வுத் திகதியாகிய 2014 பெப்ரவரி 17 திகதி வரை உரிய அதிகாரிகளுக்குச் சமர்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தீர்க்கப்படாத கணக்குகள்

--------------------------------------

06 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டுவந்து காணப்படும் ரூபா 510,673 இற்கான 03 கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மதிப்பளிக்கப்படாத காசோலைகள்

---------------------------------------------------

05 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 27,256 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலை ஒன்றினை 2014 ஜூன் மாதம் வரை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 சமன்தன்ன வத்த காணி ஏலவிற்பனை

---------------------------------------------------------

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட வல்பிட கிராம அலுவலர் வட்டாரத்தில் காணப்படும் 08 ஏக்கர்கள் 02 ரூட்கள் 9.2 பர்சஸ்கள் கொண்ட சமன்தென்ன வத்த என்ற காணி தனியார் கம்பனி ஒன்றினால் 92 துண்டுகளாக பகிரப்பட்டிருந்ததுடன் சபையினால் 2013 செம்டம்பர் 02 ஆந் திகதி அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக 2014 பெப்ரவரி 12 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் 2008 திசெம்பர் 16 திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 05/02/1/384 கொண்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து துணை பங்கீடுகளுக்கும் முதலாவது காணித்துண்டிற்கு ரூபா 1,000 உம் மற்றும் மீதியாகவுள்ள காணித் துண்டுகளுக்கு ரூபா 500 வீதமும் சபைக்கு பணம் செலுத்தி இசைவுச் சான்றிதழ் ஒன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும். 2014 பெப்ரவரி மாதம் அளவில் 03 காணித்துண்டுகள் தவிர ஏனைய அனைத்து காணித்துண்டுகளும் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும் இசைவுச் சான்றிதழ் பெற்றிருக்காமையால் ரூபா 46,500 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ii) 1992 இன் செப்டம்பர் 30 ஆந் திகதி இலக்கம் 3/2/1/10(ii) கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 01 ஹெக்டயாருக்கு கூடிய அனைத்து துனை பங்கீடுகளும் பாதைகளுக்கான இடத்தை கழித்த பின்னர் காணியின் அளவில் 10% இற்கு குறையாத அளவு சனசமூக மற்றும் கழியாட்ட விடயங்களுக்காக பொருத்தமான இடங்களில் இருந்து ஒதுக்க வேண்டியிருந்தது. இதன் பிரகாரம் ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்பட்ட 7 ஏக்கர் 1 ரூட் 25.6 பர்சஸ் காணிப் பகுதியில் சபைக்கு வழங்க வேண்டிய 10% அளவு 2 ரூட் 32.41 பர்சஸ் எனினும் சபை பெற்றிருந்த தொகை 2 ரூட் 21.6 பர்சஸ் ஆகும் என கணக்காய்வு அவதானிக்கப்பட்டது. அதே போல் சபைககு வழங்கியிருந்த காணியில்

ஒரு முனையில் அமைந்து சரிவான பயன்படுத்த முடியாத ஒரு இடம் என கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது.

3.4 முறைசார கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------

(i) 2006 ஜனவரி 25 திகதிய இலக்கம் 08 கொண்டுள்ள மற்றும் 2006 மார்ச் 01 திகதிய இலக்கம் 09 கொண்டுள்ள தேசிய கொள்வனவு முகவர் நிலைய சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு மாற்றமாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 436,950 தொகையொன்று செலுத்தி அலுவலக வளவில் சிசிடிவி கமரா முறைமை ஒன்று பொருத்துவதற்காக தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) துனைப்பதீவேடு / பட்டோலைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் பேரேட்டுக் கணக்கு மீதிகளை சமப்படுத்துவதற்காக ரூபா 6,482,650 இற்கான வருமானத்தினை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------

1985 இன் 01 இலக்க (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு இன் பிரகாரம் சபையில் கடமையாற்றிய பிரதியீட்டு மற்றும் அமைய ஊழியர்களுக்காக குறிப்பிட்டுள்ளவாறு பணம் அனுப்பப்படாமையால் மிகை விதிப்பாக ரூபா 22,380 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தியிருந்தது.

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 210(2) இன் பிரகாரம் கொடுப்பனவுகள் தாமதம் காரணமாக ஏதேனும் கட்டணங்கள் செலுத்துவதற்கு நேரிடும் இடத்து அதற்கு பொறுப்பான அலுவலரிடம் அக்கட்டணத்தை அறவிடப்பட வேண்டும், எனினும் சபை அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்